பக்கங்கள் எட்டு

விலை ரூபா: 5.00

# வலம்புரி

# VALAMPURI

லாலாசோப்
சண்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
விக்னேஸ்வரா
பல்பொருள்வாணிபம்
923நல்லூர் மார்க்கட்,
யாழ்ப்பாணம்.
லாலாசோப் அச்சுவேலி
(கி985)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 17 வியாழக்கிழமை ( 02-11-2000 ) தொ. பேசி 3378 ஒலி: 318

## பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலையை கண்டித்து யாழ். நகரில் மௌன ஆர்ப்பாட்டம்!

தமிழ்மக்கள் அன்றாடம் அனுபவித்து வரும் துன்பதுயரங்களை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்தியபத்திரிகையாளர்மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து யாழ் நகரில் நேற்று மௌனப் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதில் கலந்து கொண்ட பத்திரிகையாளர் கள வாயையும், கையையும் கறுப்புத்துணியால் கட்டியிருந்தனர்.

மௌனப் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண் டோர் தமது எழுதுகோல்களைக் கீழேவைத்து விட்டு இருநிமிட மௌன அஞ்சலியின் பின் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தனர்.

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த மௌனப் ஆர்ப்பாட்டத்தில் யாழ். ஆயர் அதிவணக்+த்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார், அருட் தந்தை ஜெபநேசன் (8ஆம் பக்கம் பார்க்க)

## ★ இனப்பிரச்சினை விவகாரத்தில் திருப்புமுனை

# புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நோர்வே விஷேட பிரதிநிதி சந்திப்பு!

### உண்மைநிலைகளை கேட்டறிந்தனர்!!

(வவுனியா விஷேட நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ள, நோர்வேயின் விஷேட பிரதிநிதி எரிக்சோல்ஹைம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நேற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்,

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப்பகுதியில் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஜோன் ஷெஸ் பேர்க் மற்றும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஆகியோரும் கலந்துகொண்டனர். இப்பேச்சுவார்த்தை இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் திடீர் திருப்புமுனையாக அமைந்துள்ளதென அரசியல் வல்லுனர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினையை கையாளுவதற்காக நியமிக்கப்பட்ட நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சோல் ைஹம் வன்னியில் நேற்று மாலை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

மிகவும் இரகசியமாகவும் பிரத்தியேகமாகவும் ஒழுங்கு செய்யப்பட்ட வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த இப்பேச்சுவார்த்தையின் போது விடு (8 ஆம் பக்கம் பார்க்க)

## சகோதரர்கள் இருவர் ஆற்றில்மூழ்கி மரணம்

### காத்தான் குடியில் சோகம்

காத்தான் குடி ஆற்றில் குளிக்கச்சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் ஆற்றில் மூழ்கி மரணமாகினர். இப்பரிதாபச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. மஞ்சந்தொடுவாய் ஹிஸைனீயா வித்தியாலயத்தில் 4ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மீராமுகைதீன் தஸ்லீன, (வயது 9) அவரது [8 ஆம் பக்கம் பார்க்க]

## பொலிஸ் அதிகாரிகள் திடீர் இடமாற்றம்

பண்டாரவளைப் பகுதியிலும், கினிகந்தனைப்பகுதியிலும் இடம் பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து, அப்பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரிகள் நேற்று திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இத்திடீர் இடமாற்றத்திற்கான உத்தரவை பதில் பொலிஸ்மா அதிபர் ஏ.ரி. ஆனந்தராசா பிறப்பித்திருந்தார்.

பண்டாரவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வவுனியாவிற்கும். கினிகந்தனைபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹற்றனுக்கும்இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (வ)

## ‘ட்ரக்’ மீது கிளைமோர் தாக்குதல் 2அதிகாரிகள் உட்பட மூவர் பலி

(கொழும்பு)

தென்மராட்சி மந்துவில்பகுதியில் ராணுவ‘ட்ரக்’ வண்டி மீது விடுதலைப் புலிகள் நடாத்திய கிளைமோர் தாக்குதலில் படைத்தரப்பில் இரண்டு அதிகாரிகள் உட்பட மூவர் உயிரிழந்ததாகவும் 6பேர் காயமடைந்ததாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 6-30 மணியளவில் இடம் பெற்ற இத்தாக்குதலில் இராணுவ ‘ட்ரக்’ வண்டி பலத்த சேதத்துக்குள்ளானது.

இதேவேளை கிளாலி, (8ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள் நான்கு படை நடவடிக்கையில் கடந்த 29ம் திகதி கனகம்புளியடியில் இடம் பெற்ற மோதலின் போது;

★ லெப்டினன் கோடீஸ் [மாசிலாமணிகருணானந்தன் ( 8ஆம் பக்கம் பார்க்க)

### பயணிகள் கப்பல் இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

‘சிற்றி ஓவ் றிங்கோ’ பயணிகள் கப்பல், இன்று வியாழக்கிழமை பருத்தித்துறையிலிருந்து திருமலை நோக்கிப் புறப்படவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதி பெற்றவர்கள் இன்று காலை 7 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ்.சிங்களமகா வித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு மேலும்கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## யாழ். பஸ் நிலையத்தில் நேற்று பலத்த பாதுகாப்பு

பத்திரிகையாளர் நிமலராஜன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமையை கண்டித்து நேற்று யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இடம்பெற்ற மறியல் போராட்டத்தையடுத்து பஸ் நிலையப் பகுதி பலத்த பாதுகாப்பிற்குட்படுத்தப்பட்டிருந்தது. யாழ் மத்திய பஸ் நிலையத்தில்நேற்றுக் காலை 8-00 மணிமுதல் பெருந்தொகையான பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடு ( 8ஆம் பக்கம்பார்க்க

## ஐ சி.ஆர்சியின்துணையுடன் தரைவழிப்பாதை திறக்க ஈ.பி.டி.பிகோரும்!

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டு மக்களுக்கான தரைவழிப் பாதையை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வழித்துணையுடன் ஏற்படுத்துவதற்கு ஈ.பி.டி.பி அமைப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப்பிரச்சினையை நீக்குவதற்கு, தரைவழிப்பாதை ஒன்றினை சர்வதேச செஞ்சிலுவைச் (8ஆம் பக்கம் பார்க்க)

### பிரதேச சபை தலைவரின் உத்தரவையடுத்து

## பனிப்புலத்திலுள்ள மினி சினிமா மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு காளையடி பனிப்புலப் பகுதியிலுள்ள மினிசினிமா திரையரங்கை, மறு அறிவித்தல் வரை மூடுமாறு வலிமேற்கு பிரதேச சபைத்தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி பி அமைப்பாளருமான ந திரிலோகநாதன் உத்தரவிட்டுள்ளார்.

(8ஆம் பக்கம்பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளதழ்

# சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

(மோதிரம்)

R. எழுத்து பொறிக்கப்பட்ட 3/4 பவுண் மோதிரம் ஆரியகுளம் சிவில் சாரியாலயத்திற்கு அண்மையிலோ அல்லது வழியிலோ தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து "சிற்றிலிகொம்" இராமநாதன் வீதி, வளாகச் சந்தியில் ஒப்படைக்கவும் சன்மானம் நன்றியுடன் வழங்கப்படும்.

## தமிழ் இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினரால் நடாத்தப்படும் தமிழ் இலக்கிய விழா இம்மாதம் 3 ஆம், 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நடைபெறவுள்ள இவ்விழாவில் இம்மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் தலைமைதாங்குவார்.

மேற்படி விழாவில் மூன்று நாட்களும் காலையில் ஆய்வரங்கும், மாலையில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மேலும் இம்மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களைக் கொண்ட கண்காட்சியும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

(த)

# 15இலட்சம் பனை மரங்கள் வடபகுதியில் அழிக்கப்பட்டுவிட்டன

## பனை அபிவிருத்தி சபை தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 10 ஆண்டுகளில் 15 இலட்சம் பனைமரங்கள் வடபகுதியில் அழிக்கப்பட்டுவிட்டது. இதனை ஓரளவு ஈடு செய்யும் விதத்தில் பனை அபிவிருத்திச்சபை பனம் விதை நடுகையை வருடம் தோறும் நாட்டிவருகிறது.

பனை அபிவிருத்தி சபையின் புத்தாயிரம் ஆண்டிற்கான பனம்விதை நடுகைத் திட்டத்தின் கீழ் சங்கானைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற பனம் விதைநடுகை திட்டத்திற்கு தலைமை வகித்த பனை அபிவிருத்தி சபைத்தலைவர் சே. கோகுலதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் மங்கள விளக்கேற்றி மேற்படி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தலைவர் தொடர்ந்துஉரையாற்றுகையில், தற்போது வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டமையும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்அமைச்சின் பொறுப்பை ஏற்றுள்ளமை வரவேற்கத்தக்க விடயம்என்றார்.

பிரதேச சபை பணியாளர்கள், மானிப்பாய், சங்கானை பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், மற்றும் ஊழியர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. [க]

## அடையாளம் காணமுடியாத நிலையில் 14 சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை, விந்துனுவெவ புனர்வாழ்வு நிலையத்தில் அண்மையில் நடைபெற்றபடுகொலைச் சம்பவத்தின் போது பலியாகிய 14 பேரின் சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்ட 27 பேரின் சடலங்களே இதுவரை அடையாளம் கணப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்படாத மேற்படி 14 சடலங்களும் தொடர்ந்தும் கொழும்பு இராணுவ வைத்திய சாலையிலேயே வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இச்சம்பவத்தில் தாக்குதலை நடத்திய ஒருவரும் இறந்திருக்கலாமெனப் புதிய சந்தேகம் எழுந்துள்ளது.

40 பேர் வரையே மேற்படி முகாமில் தங்கியிருந்தனர். ஆனால் 13 பேர் காயமடைந்தும், 27 பேர் உயிரிழந்தும், இருவர் தப்பியும்உள்ளனர். 42 பேர் வரை மொத்தமாக இதில் சம்மந்தப்பட்டுள்ளார்கள்.

அத்தோடு விடுதலையாகிய நபர் ஒருவர் ஏதோ தேவையின் நிமித்தம் சம்பவதினத்தன்று இம்முகாமிற்கு வருகை தந்தபோது அவரும் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(த)

## சுற்றுலா

நெடுந்தீவிற்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களும், நயினாதீவு ஸ்ரீ. கணேசா வித்தியாலய மாணவர்களும் சுற்றுலாவை மேற்கொண்டனர்.

அங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோட்டைகள், குதிரைகள், 40 அடி மனிதனின் கால்சுவடு போன்றவற்றை பார்வையிட்டனர்.

(த-110)

## முக்கிய நிகழ்வுகள்

[யாழ்ப்பாணம்]

கந்த சஷ்டி சூரசம்ஹார நிகழ்வை ஒட்டி நல்லூர் கந்த சுவாமி கோயில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் கோளாறு பதிகம், இடர்களை பதிகம் ஓதுதல், கந்த சஷ்டி நற்சிந்தனைகள் என்பன இடம்பெற உள்ளன.

இன்று வியாழக்கிழமை பி. பகல் 1.30 மணியளவில் இடம் பெறும் நிகழ்வுகளை வட பிராந்திய இந்துப் பேரவையினர் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தககது.

அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகள் பலவும் இடம்பெறவுள்ளன.

(க-செ)

## கடை உடைத்து சேதம்

(யாழ்ப்பாணம்)

கொட்டகல, ஹட்டன் நகரிலுள்ள தமிழரின் கடையொன்று கடந்த திங்கட்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இனம் தெரியாதோரால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையிலேயே மேற்படி சம்பவம் நடைபெற்றுள்ளது.

கடை சேதமாக்கப்பட்டுள்ளதுடன் பொருட்கள் பலவும் சூறையாடப்பட்டுள்ளன.

கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சீமெந்துக் கற்கள் அனைத்தும் தூள்தூளாக உடைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(த)

# நினைவுகளாய் நெஞ்சில் சுமக்கும் முதலாமாண்டின் நிறைவு நாளில்

முகிழ்ப்பு: 16 - 09 - 1963



பறிப்பு: 02 - 11 - 1999

## தோழர் ரமேஷ்
## நடராசா அற்புதராசா

**ஆறாம் விரலாய் பேனா ஏந்திய அற்புதனே!**
**ஆறவில்லையடா உன் இழப்பின் துயரம்**

**ஈழச் செய்தியாய் எழுதத் தொடங்கி**
**ஈழ முழக்கமாய் எழுந்து நின்றாய்!**

**மக்களின் குரலாய் வானலையில் ஒலித்து**
**திக்கெட்டும் வியாபித்து நின்றாய்!!**

**இன வரலாற்றில் ஈடில்லா சாதனையாய்**
**தினமுரசு வார இதழைத் திறம்பட செய்தாய்!**

**உன் பணிகள் எழுத, உன் பணிகள் தொடர**
**இரவுகளையும் பகலாக்கி முயல்கிறோம் தோழனே!**

**புழுதி கலந்த காற்றை வீசும் செம்மண் பரப்பில்**
**கால் பதித்து நிற்கின்றோம் தோழனே!**

உன் நினைவுகளை நெஞ்சில் சுமந்தபடி

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி [ஈ. பி. டி. பி]**

(இ-991)

★ நான் ஓடி வந்து பார்த்த போது

# எனது கணவர், மகன், பேரப் பிள்ளைகள்

# துடிதுடித்தபடி இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்

## பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலை வழக்கில் தாயார் சாட்சியம்

(நமது அலுவலக நிருபர்)

எனது கணவர் கத்திக் குளறிய படியே இருக்க மலசல கூடத்தில் இருந்த நான் அவசரமாக ஓடி வந்து பார்த்த போது எனது கணவர், மகன் பேரப்பிள்ளை ஆகியோர் இரத்த வெள்ளத்தில் துடி துடித்தபடி இருந்னதர்.

பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலை வழக்கு விசாரணை நேற்று முன் தினம் யாழ். நீதிவானால் நீதிமன்றில் நடைபெற்றபோது அவரது தாயார் திருமதி மயில்வாகனம் லில்லி தெரேசா (வயது 59) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது சாட்சியத்தில் தெரிவிக்கையில்;

சம்பவதினம் எமதுபகுதிக்கு மின் தடை போடப்படும்தினமாகும். வழமை போலவே எனது கணவர் பி. பி. ஸி செய்தி கேட்டுக் கொண்டிருந்தார். மகனும் வழமை போல அறையில் இருந்து தமது எழுத்து வேலைகளை மேற்கொண்டிருந்தார்.

மருமகள் அடுத்த அறையில் பிள்ளைகளை உறங்கவைத்துக் கொண்டிருந்தார்.

இந்நேரத்தில் ஒரு நாளும் இல்லாதது போல் பெரிய வெடிச்சத்தங்களும் வெளிச்சமும் எனது வீட்டில் ஏற்படுவதை கண்டேன். பதற்றத்துடன் குளறிய சத்தம் கேட்ட திசை நோக்கிமலசலகூடத்தில் இருந்து வந்து கொண்டிருந்தேன்.

வீட்டுக்குள் இருந்துஎன் மீது ஏதோ வெல்லாம் மளமளவென கொட்டுப்பட்டுக் கொண்டிருந்தது. நான் வெட்டுகிறார்கள் வெட்டுகிறார்கள் என்று குளறிக்கொண்டேன். அந்த நேரத்தில் எனது கணவரும் வெட்டுகிறார்கள் என்று பலத்த சத்தமிட்டார்.

அங்கு ஏற்பட்ட சம்பவங்களால் எனது முகம் கைபோன்றவற்றில் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. எனது பல்லும் ஒன்று உடைந்ததுடன் வயிறு கால் ஆகிய வற்றிலும் காயங்கள் ஏற்பட்டன.

சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு வந்த போது அங்கு எனது கணவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். எனது பேரப்பிள்ளையும் இரத்த வெள்ளத்தில் கிடந்தது. மகனின் அறையை நோக்கி சென்றேன். (விம்மி விம்மி அழுது கொண்டு சொன்னார்.) மகனும் இரத்த வெள்ளத்தில் துடித்தார். காயப்பட்டவர்களும் ஒவ்வொரு வரும்அவலமிட்டபடி இருந்தனர்.

வைத்தியசாலை செல்வதற்கு வாகன வசதியின்றி இறுதியில்லான்ட்மாஸ்ரர்ஒன்றின் உதவியுடன் காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதித்தனர். மின்சார விநியோகம் மீண்டும் ஏற்பட்டதற்கு பின்பே அயலவர்கள் எமது வீட்டிற்கு வந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக கிராம சேவகர் சாட்சியமளிக்கையில் எமது வீட்டில்இருந்து வழமை போல் கதைத்துக் கொண்டிருந்து எமதுஅலுவல்களில் ஈடுபட்டிருந்தோம் எமது பிள்ளைகளும் படித்துக் கொண்டிருந்தனர். அந்நேரம் நிமலராஜனின் வீட்டுத்திசையில் மூன்று துப்பாக்கி சூட்டு சத்தம் கேட்டதை உணர முடிந்தது.

தொடர்ந்து கிரனேற்தாக்குதல் சத்தம் அதே திசையில் இருந்து வந்ததை உணர்ந்தோம்.

இதைத் தொடர்ந்து நிமாலின் வீட்டில் இருந்து சிறு பிள்ளைகள் கதறி அழும் சத்தங்களும் அவலக் குரல்களும் கேட்டதைத் தொடர்ந்து நாமும் அங்கு சென்றோம். அங்கு நிகழ்ந்த கொடூரசம்பவத்தால் யாவரும் இரத்தம் தோய்ந்த நிலையில் இருந்தனர். நிமாலின் தந்தை படுகாய மடைந்திருந்ததினால் தன்னை முதலில் வைத்திய சாலைக்கு கூட்டிச் செல்லுமாறும் தன்னை பின் தொடர்ந்து மற்றவர்கள் வருவார்கள் என்று கூறியதற்கு இணங்க மோட்டார் சைக்கிளில் வைத்திய சாலை செல்ல புறப்பட்டோம்.

புறப்பட்டு சென்று சற்று நிமிடத்தின் பின் எவரும்பின் தொடராததினால் வீடு திரும்பிசெல்ல புறப்பட்டசமயம்அங்கு நின்ற படையினர் லான்மாஸ்ரர் வரும் வரை காயப்பட்ட நிமாலின் தந்தையை அங்கு இருக்கசொல்லிவிட்டு லான்மாஸ்ரரையும் ஏனைய காயப்பட்டவர்களையும் விரைவாக அழைத்து வரமுயற்சிக்க சொன்னார்கள்.

இதற்கிடையில் தமது (இராணுவ)வாகனம் ஒன்றை ஒழுங்குபடுத்த தாம் முயற்சிப்பதாக கூறினர்.

லான்ட்மாஸ்ரரில் காயக்காரர் சகலரையும் ஏற்றிக் கொண்டு வைத்திய சாலை நோக்கி புறப்பட்ட சமயம் இராணுவத்தினர் நாம்செல்ல இருந்த வீதியில் உள்ள இராணுவத்தினருக்கு வானொலி தொடர்பு மூலம் அறிவித்து வீதிபோக்குவரத்தில் நெருக்கடி ஏற்படாத வகையில் உதவி புரிந்துள்ளனர்.

இதற்கிடையில் காயப்பட்டவர்களை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல வசதியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை தேடி கோயில் வீதி வழியாக அவர்களின் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்திற்கு சென்று நிலமைகளை எடுத்துக்கூறி உதவி செய்யும் படி கேட்டோம். அப்போது அங்கு கடமையில் நின்ற ஊழியர் உடனடியாக தலைமை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலமைகளை கூறிய பின் (அவர்களுக்கு) எம்மிடம் அவ் ஊழியர் எமக்கு உடனடியாக வைத்திய சாலையுடன் தொடர்பு கொண்டு அம்புலன்ஸ் வண்டியை பிடிக்குமாறு கூறினார்.

நம் அக்காரியாலயத்திற்கு அண்மையில் உள்ள தொலை தொடர்பகத்தில் இருந்து வைத்திய சாலைக்கு இணைப்பை ஏற்படுத்த முனைந்தபோது இணைப்பு கிடைக்கவில்லை. உடனடியாக புறப்பட்டு லான்ட்மாஸ்ரர் ஒன்றை ஒழுங்குபடுத்தினோம். லான்ட்மாஸ்ரர் சாரதி இரவுவேளை வாகனம் செலுத்தபயந்தார்.

காயமடைந்தவர்களை லான்ட்மாஸ்ரரில் ஏற்றிக் கொண்டோம். இரத்தவெள்ளத்தில் இருந்த நிமலராஜனின் உடலையும் லான்ட்மாஸ்ரரில்போட்டுக்கொண்டு வைத்தியசாலை நோக்கி லான்ட்மாஸ்ரர்புறப்பட்டது. லான்ட்மாஸ்ரர் சாரதி பயந்திருந்ததினால் அவருக்கு துணைக்கு நானும்சென்றேன்

இச்சம்பவங்கள் நிகழ்ந்த பின்இராணுவத்தினர் அருகில் இருந்த வீடுகளை சோதனை இட்டனர் எனவும் தெரிவித்தார். (க-12)

# மட்டுவில் பகுதியில் 13 வயது சிறுமி மீட்பு

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் சரசாலைப்பகுதியில் படையினர் கடந்த செப்ரெம்பர்மாதம்மேற்கொண்ட நடவடிக்கையின்போது 13 வயது சிறுமி ஒருவர் காயமடைந்தநிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இராமசாமி ரேணுகா (133, கோணாவில் வீதி அக்கராயன்குளம், கிளிநொச்சி) என்னும் சிறுமியே மீட்கப்பட்டவராவர்.

பிரஸ்தாப சிறுமி தற்போது காங்கேசன் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டது (க-12)

# கொழும்பிற்கு செல்ல பரீட்சார்த்திகள் அச்சம்

(கொழும்பு)

பொது எழுதுவினைஞர் சேவையில் அதிசிறப்பு வகுப்புக்கு அனுமதிக்கப்படுவதற்கான பரீட்சைக்கு கொழும்பு செல்வதற்கு மட்டக்களப்பு திருகோணமலை வாசிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் 4ஆம் 5ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சையில் திருகோணமல, மட்டக்களப்பு பகுதிகளில் இருந்து 500இற்கும் மேற்பட்டவர்கள் தோற்றவுள்ளனர்.

கொழும்பில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாகவே பரீட்சார்த்திகள்அச்சம் வெளியிட்டுள்ளனர். (உ)

# நண்பர்களின் பகைமை கொலையில் முடிவு

(கொழும்பு)

நண்பர்களிடையே ஏற்பட்ட தகராறு கொலையில் முடிவுற்றது.

புத்தளம் சிறாம்பிட்டி எனும் இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவம்பற்றி தெரியவருவதாவது,

நண்பர்களான இருவரிடையே நீண்ட நாட்களாக பகைமைஉணர்வு மேலோங்கியிருந்தது.

சம்பவதினம் நண்பரின் வீட்டுக்குச்சென்ற மற்றைய நபர், நண்பரின் கழுத்தினை கத்தியால் வெட்டிக் கொலை செய்தார்.

அத்துடன், கொலை செய்யப்பாவித்த கத்தியுடன் பொலிஸில் சரணடைந்திருப்பதாகவும் அறியவந்துள்ளது. (உ)

நாடு திரும்பும் தொழிலாளர் தொடர்பாக

# வேலைவாய்ப்பு பணியகம் மீது அமைச்சர் பாய்ச்சல்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் சென்று பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி நாடு திரும்புவோர் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கத்தவறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பிரதிநிகள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தொழில் அமைச்சர் அலவி மௌலானா அறிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் இவ்வாறு நாடுதிரும்புவோர் தொகை அதிகரித்திருப்பதாகவும், அவர்களில் பெண்களே கூடுதலாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள தொழிலமைச்சர், இவ்வாறானவர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்க திட்டமொன்று செயற்படுத்தப்படவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லும் பெண்களது ஒருவருட சம்பளத்தினை சேமிப்பது தொடர்பாக அந் நாட்டு தூதரகங்களுடன் பேச்சுக்கள் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# ஹிஸ்புல்லா பதவியேற்பு

(மட்டக்களப்பு)

தகவல் தொடர்புகள் முன்னாள் பிரதியமைச்சர் எம் எல். ஏ எம். ஹிஸ்புல்லா நகர அபிவிருத்தி நீர்ப்ப சனத்துறை பொது வசதிகள் அமைச்சின் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பின் தலைவராக நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார். (உ-60)

# இராசி பலன்

02 - 11 - 2000

(ஐப்பசி 17, வியாழன்)

சஷ்டி மு. இ 8.30 வரை
பூராடம் பி. ப 5.05 வரை
ராகுகாலம் 1.34 - 3.04
சுபநேரம் 7.34 - 9.04
சித்தர், கந்தசஷ்டி விரத இறுதி நாள்

**மேடம்**
மனக்கிலேசம், பிரயாணம், வயிற்றுக்கோளாறு, கட்டுப் படுதல்,

**இடபம்**
எதிர்பாராத பிரச்சினை, நோய்வாய்ப்படல், பிரயாணபயம்,

**மிதுனம்**
கௌரவமான நிலை, வாகன வசதிகள், தனவரவு, சுவாரஸ்யம்.

**கடகம்**
மகிழ்ச்சியன சம்பவம், சத்துரு ஜெயம், சுகவாழ்வு, காரிய ஜெயம்.

**சிங்கம்**
சொத்துக்களால் கவலை, காரிய தடங்கல் உடல் உபாதை, தாழ்வு நிலை.

**கன்னி**
தாய் வழி உறவு, கல்வியில் மேன்மை, பயந்த சுபாவம், தன்நம்பிக்கைக் குறைவு.

**துலாம்**
தன வரவு, நினைத்த காரியம் கைகூடும், பிரயாணம், சகோதரர் உதவி.

**விருச்சிகம்**
வாக்குக் கலகம், கௌரவக் குறைவு, தன விரயம், முயற்சி தாமதம்.

**தனுசு**
புத்தகம் கிடைத்தல், நல்ல உணவு கிடைக்கும், சயன சுகம், உடல் நலம்.

**மகரம்**
உணர்ச்சிவசப்படல், சயன சுகக்குறைவு, சுப காரியச் செலவு. முயற்சி தாமதம்.

**கும்பம்**
கீர்த்தி, காரிய நன்மை, தன வரவு, மன மகிழ்ச்சி, உறவினர் சந்திப்பு.

**மீனம்**
முயற்சிகள் கைகூடும், தொழில் அதிகாரம், பணிவிடை, பரியாதை

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

★ வளவன் ★

# மட்டக்களப்பில் நேற்று ஹர்த்தால் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு)

நுவரெலியா உள்ளிட்ட மத்திய மாகாணத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற வன்முறைகளைக் கண்டித்து நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்துப் பணிகளும் நேற்று ஸ்தம்பித மடைந்து காணப்பட்டது.

கடைகள், அலுவலகங்கள், வங்கி உட்பட எந்தவொரு நிறுவனமோ அன்றி பாடசாலைகளோ இயங்கவில்லை.

உள்ளூர் வெளியூருக்கான போக்குவரத்தில் தனியார் மற்றும் அரச போக்குவரத்துச் சாதனங்கள் ஈடுபடாமையால் வெளியிடங்களுக்கான தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தது.

வீதிகள் சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக்காணப்பட்டது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் இக் ஹர்த்தல் மிகவும் உணர்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (உ-60)

தெற்கு மீனவர் குழு

# மட்டக்களப்பிற்கு விஜயம்

(ஈச்சமோட்டை)

தென்னிலங்கை மீனவர் குழுவொன்று மட்டக்களப்பிற்கு தொழில் நிமிர்த்தம் சென்றுள்ளது.

கடந்த 10 வருடங்களின் பின்னர் இதுவே முதல் தடவையாக இவர்கள் மட்டக்களப்பிற்கு சென்றுள்ளனர்.

இக்குழுவினர் கண்ணாடி இழைப் படகுகளில் ஒட்சிசன் சிலிண்டர்கள் உடன் சென்று 12 குடில்கள் அமைத்து தங்கியுள்ளனர்

அங்கு இவர்கள் சங்கு, கடலட்டை போன்றவற்றை சேகரித்து வெளிநாட்டிற்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட உள்ளதாக அறியப்படுகிறது.

நாட்டின் அந்நியச் செலாவணியில் மேற்படி நடவடிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கூறப்படுகிறது. (த-59)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## வர்த்தகமும் கணக்கியலும்

நேரம்:- 1மணி

ஆக்கம்:- S. தயாளன்
உயர் தொழில்நுட்ப நிறுவனம்

நேற்றைய தொடர்ச்சி

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக

23) இலாப நோக்கமற்ற நிறுவனங்களால் தமது வருமானம், செலவினங்களை கண்டறிந்து கொள்ள தயாரிக்கும் கணக்குகள்?
1) கொள்ளல் கொடுத்தல் கணக்கு 2) இலாப நட்டக் கணக்கு
3) காசுக் கணக்கு 4) வருமானச் செலவுக் கணக்கு

24) பொருள் பற்றுக்கான நாட்குறிப்பு
1) பொருள் கணக்கு வரவு வியாபாரக் கணக்கு செலவு
2) பொருள் கணக்கு வரவு காசுக் கணக்குச் செலவு
3) பொருள் பற்றுக் கணக்கு வரவு வங்கிக் கணக்கு செலவு
4) வியாபாரக் கணக்கு வரவு இருப்புக் கணக்கு செலவு

25) களஞ்சியக் காப்பில் பயன்படுத்தப்படும் இரு முக்கிய ஆவணங்களை கொண்டுள்ள தொகுதியை தெரிவு செய்க?
1) தொக்கு அட்டை, கட்டளை 2) கட்டளை, விலை அட்டை
3) தொக்கு அட்டை, கொள்கல அட்டை
4) கொள்கல அட்டை, விலை அட்டை

26) பந்தித்த (சுங்கப்) பண்டக சாலையின் அதியுச்ச அளவான பயனைப் பெற்றுக் கொள்ளும் தரப்பினர் யார்?
1) உற்பத்தியாளர் 2) இறக்குமதியாளர்
3) மொத்த விற்பனையாளர் 4) பாரிய அளவுக் கம்பனிகள்

27) வெகுசனத் தொடர்பு சாதனங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதியை தெரிவு செய்க
1) சுற்றறிக்கைகள், இண்டகொம், அஞ்சல் அட்டை, அறிவித்தல்கள்
2) தொலைபன்னி, சுவரொட்டிகள், தந்திகள், ரெலக்ஸ்
3) ரெலக்ஸ், செய்தித்தாள்கள், கடிதங்கள், பக்ஸ் இயந்திரம்
4) வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், பருவசஞ்சிகை

28) சுதந்திர வர்த்தக வலயத்திற்கு பொறுப்பான அமைப்பு யாது?
1) இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை
2) இலங்கை முதலீட்டுச் சபை (B I)
3) கைத்தொழில் பேட்டை 4) மத்திய வங்கி

29) மத்திய வங்கியின் நாணய சபையின் உறுப்பினர் யாவர்?
1 ஜனாதிபதியின் ஆளுனர், நிதியமைச்சர்
2) ஜனாதிபதி, நியமன உறுப்பினர்
3) மத்திய வங்கியின் ஆளுனர், நிதி அமைச்சின் செயலாளர், நியமன உறுப்பினர்
4) மத்திய வங்கி

30) மத்திய வங்கியால் அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்திய பணம்
1) உயர்வலுப் பணம் 2) போலிப்பணம்
3) கேள்வி வைப்புப்பணம் 4) கிட்டிய பணம்

31) மத்திய வங்கியின் பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள பகுதிகளை குறிப்பிடுக,
1) மாத்தளை, அனுராதபுரம் 2) அனுராதபுரம், கொழும்பு
3) மாத்தளை, மாத்தறை, குருநாகல் 4) கண்டி, மாத்தளை

32) புதிதாக அமைக்கப்பட்ட ஒரு வங்கித் தொழில்பிரிவு இலங்கை வதிவாளருடன் வணிகஞ்செய்ய அனுமதிக்கப் படவில்லை. இந்த வங்கித் தொழில்பிரிவு யாது?
1) வெளிநாட்டு நாணயவங்கி அலகு 2) உள்நாட்டு நாணயவங்கி
3) நாணய சபை 4) வாடிக்கையாளர் பிரிவு

33) இலங்கை வங்கியினால் அறிமுகப்படுத்திய (TELL‹ CARD) அல்லது பணவட்டையின் பெயர் யாது?
1) செட்காட் 2) பெட்காட்
3) சீவேங் காஸ்பொயின் 4) மாஸ்டர் காட்

34) ''TELE SHOP'' என்பது
1) முகவர் தபால்நிலையம் 2) உபதாபற்சந்தோர்
3) ஸ்ரீலங்கா ரெலிக்கொம்பின் முகவர்நிலையம் 4) கூரியர் சேவைநிலையம்

35) ''SMI'' சிறிய நடுத்தரக் கடன்திட்டத்திற்கு நிதிவழங்கும் நிறுவனங்களின் தொகுதி
1) ஹட்டன் நஷனல்வகிங், இலங்கைவங்கி
2) மக்களவங்கி, தேசிய சேமிப்பு வங்கி
3) உலகவங்கி, முகவரான சர்வதேச அபிவிருத்திச்சங்கம், ஆசிய அபிவிருத்திவங்கி
4) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

36) இலங்கை போக்குவரத்து துறையை அபிவிருத்திசெய்ய ஜப்பானின் உதவித் திட்டத்தின்கீழ் அண்மைக்காலத்தில் அமைக்கப்பட்ட நெடுஞ்சாலை எது?
1) பேஸ்லைன் றோட் 2) கொழும்பு கண்டி நெடுஞ்சாலை
3) கொழும்பு கட்டுநாயக்கா வீதி 4) கீல் வீதி

37) எயாலங்கா லிமிரட் (Air Lanka Ltd) பொறுப்பேற்ற தனியார்நிறுவனம்
1) பிரிட்டிஸ் எயாவேயிஸ் 2) சிங்கப்பூர் எயாவேயிஸ்
3) எமரேட்ஸ் எயர்லைன்ஸ் 4) சுவிஸ் எயர்லைன்ஸ்

38) எயாலங்கா விமானசேவையின் தற்போதைய பெயர் யாது?
1) கட்டுநாயக்கா விமானநிலையம் 2) சிறிலங்கா எயார்
3) கொழும்பு விமானநிலையம் 4) உபாலி விமானநிலையம்

39) சிறிலங்கா ரெலிக்கொம்மின் பங்குகளை கொள்வனவுசெய்த வெளிநாட்டு கம்பனியின் பெயர் யாது?
1) நிப்போன்கம்பனி ஜப்பான் 2) இலங்கை மத்தியவங்கி
3) டாட்டாகம்பனி, இந்தியா 4) ரூபேக்கோ கம்பனி

40) இலங்கையில் மிக அதிகளவு கிளைகளைக் கொண்டுள்ள ஒரு கூட்டுறவு அமைப்பு.
1) விவசாய உற்பத்திப் பொருட்சங்கம் 2) கைத்தொழிற் கூட்டுறவுச்சங்கம்
3) சிக்கனக் கடன்சங்கம் 4) மீன்பிடிக் கூட்டுறவுச்சங்கம்

# வவுனியாவில் அடிக்கடி சுற்றிவளைப்புக்கள்

(வவுனியா)
வவுனியா நகரம் மற்றும் அதனோடு இணைந்த பகுதிகள் அடிக்கடி படையினரின் சுற்றிவளைப்பிற்கும் தேடுதலிற்கும் உள்ளாக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் அன்றாடச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படும் ஆபத்து நிலை காணப்படுவதாக அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப் பகுதியில் அடிக்கடி இடம்பெறும் குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்தே இத் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக மேலும்தெரிவிக்கப்படுகிறது.
(க-த)

# ஆசிரியர் சம்பளம் பற்றி கல்வி அமைச்சு அறிவுறுத்து

(கொழும்பு)
ஆசிரியர்களின் சம்பள உயர்ச்சிகளை இனிமேல் கண்மூடித்தனமாக அதிபர்கள் சிபார்சுசெய்யமுடியாதவகையில் கல்வியமைச்சு கண்டிப்பான உத்தரவை வழங்கியுள்ளது.

இதன்மூலம் நாடளாவிய ரீதியில் கடமையாற்றும் சுமார் 2 இலட்சம் ஆசிரியர்களும் செய்யும் செயற்பாட்டை முறையான கணிப்பீட்டுத் திட்டதிற்கு உட்படுத்தி அதில் பெறும் பெறுபேற்றை அடிப்படையாக வைத்தே சம்பளம் உயர்வை வழங்க அதிபர்கள் சிபார்சு செய்யவேண்டுமென, கல்வி உயர் கல்வி அமைச்சு சுற்றுநிருபம் மூலம் பணிப்புரை விடுத்துள்ளது.

கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஆர். பி. குணவர்தனா சகல மாகாண வலயக் கோட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கும், அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்திலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.
(வ-4)

# பேராதனை பல்கலை மாணவர் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)
பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பீட மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை ஒரு நாள் அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இப்பல்கலைக் கழக கலைப் பீட மாணவர்கள் சிலரின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டமையை ஆட்சேபித்து, கலைப் பீட மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்காது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
(செ)

# சமூக நெருக்கடிகளுக்கு உட்படும் இடம் பெயர்ந்த மக்கள்

(ஈச்சமோட்டை)
யுத்த அனர்த்தத்தால் தென்மராட்சி மற்றும் கொழும்புத்துறை, ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் வசிப்போர் பல்வேறு வகையான சமூக சீரழிவுகளுக்கு உட்படும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பல குடும்பங்கள் முகாம்களில் ஒன்றாக வசிப்பதனால் இவ்வாறான அனர்த்தம் நிகழும்அபாயம் நிலவுவதாகவும் இது குறித்து பொது ஸ்தாபனங்கள் சிந்தித்து மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதே வேளையில் மேற்படி முகாம்களில் வசிப்போரின் சுகாதார தேவைகள் குறித்தும் கவனம் செலுத்தப்படுவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(க-59)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)
உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தினால் இலங்கையிலிருந்து வெளியிடப்படும் ''உலகத்தமிழர் குரல்'' எனும் சஞ்சிகை (ஆடி -மார்கழி) வெளிவந்துள்ளது.

இலங்கைக்கான தலைவர் அ. சண்முகலிங்கம் தலைமையில் வெளியிடப்பட்ட இச்சஞ்சிகையானது பலபக்கங்களில் தமிழ்ப் பண்பாடு மற்றும் இலக்கிய விடயங்களை உள்ளடக்கியது: (கி

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்ரோபர் மாதம் 29-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப் படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 155266 ஏ | 164115 ஏ |
| 164302 ஏ | 164302 பி |
| 165605 ஏ | 165605 பி |
| 165605 சி | 165605 டி |
| 165617 ஏ | 166610 ஏ |
| 166610 பி | |
| 166680 ஏ | 166681 ஏ |
| 166704 ஏ | 166895 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 164165 ஏ | 165563 ஏ |
| 165563 பி | 165563 சி |
| 165629 ஏ | 166583 ஏ |
| 166822 ஏ | 166881 ஏ |
| 166881 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 161762 ஏ | 164114 ஏ |
| 164114 பி | 165612 ஏ |
| 165612 பி | 165815 ஏ |
| 166503 ஏ | 166572 ஏ |
| 166619 ஏ | 166868 ஏ |
| 168962 ஏ | 168962 பி |
| 168962 சி | 169350 ஏ |
| 169350 பி | 169350 சி |
| 169350 டி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 163983 ஏ | 163983 பி |
| 163983 சி | 166565 ஏ |
| 166640 ஏ | 166640 பி |
| 169321 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 156026 ஏ | 156026 பி |
| 156026 சி | 156026 டி |
| 160684 ஏ | 161703 ஏ |
| 161703 பி | 161703 சி |
| 161703 டி | 161703 ஈ |
| 164017 ஏ | 164017 பி |
| 164017 சி | 165723 ஏ |
| 165723 பி | 165793 ஏ |
| 166451 ஏ | 166458 ஏ |
| 166515 ஏ | 166539 ஏ |
| 166539 பி | 166635 பி |
| 166635 பி | 166660 ஏ |
| 166865 ஏ | 166865 ஏ |
| 166902 ஏ | 169366 ஏ |
| 169415 ஏ | |

## இன்று ஒரு தகவல்

# அன்பு என்ற உயரிய குணத்தால் இன்பமுடன் வாழ்ந்திடுவோம்

அதிசயங்கள் பல நிறைந்த இவ்வுலகிலே எத்தனையோ வகையான உயிர் இனங்கள் வாழ்கின்றன. மனிதர்கள், பறவைகள், விலங்குகள் என அவை எண்ணிலடங்காதவை இவ் உயிர் இனங்கள் அனைத்திலும் பெறுதற்கரிய பிறவி மனிதப்பிறவியே.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற மனிதன், மனிதனாக வாழவேண்டும். மனிதனாக வாழ்வதற்கு நல்ல செயல்களும், நல்ல குணங்களுமே உறுதுணையாக இருக்கின்றன. அன்பு என்ற உயரிய குணமே நல்ல செயலுக்கும். குணத்திற்கும் அடித்தளமாக அமைகின்றது.

மனிதன் அன்பால் இன்பமான வாழ்வை அமைக்க முடியும் என்பதற்கு,

''நல் அன்பால் வளர்த்திடுக இன்ப நல் வாழ்வை'' எனப் பாரதிதாசன் இனிமையாகக் கூறியுள்ளார்.

''ஆறறிவு படைத்த மானிடர்களிடையே மட்டுமன்றி, ஐந்தறிவு படைத்த ஜீவன்களிடையேயும் அன்பு உள்ளது. மானிடர்கள் ஒவ்வொருவரும் தமக்கிடையே அன்பை மையமாகக்கொண்டு பல உறவுகளை ஏற்படுத்தி இன்பமாக வாழ்கின்றார்கள். ஒவ்வொரு மனிதனும் தனது உயிரை பாதுகாத்து, தனது உறவுகளை எவ்வாறு நேசிக்கின்றானோ அவ்வாறே ஐந்தறிவு படைத்த உயிர்களையும் பாதுகாத்து, நேசிக்கின்ற மனிதரை ''மனிதருள் மாணிக்கங்கள்'' எனப் போற்றப்படுகிறது.

உலகைப் படைத்த இறைவனை நாம் எவ்வாறு நேசிக்கின்றோமோ அவ்வாறே பிற உயிர்களையும் நேசிக்கவேண்டும். ஒவ்வொருவரும் பிற ஜீவன்களிடம்கருணை காட்டவேண்டும். இக்கருணை அன்பின் அடித்தளத்திலிருந்தே பிறக்கின்றது.

அன்பு நிறைந்த மனிதர்களே உலகில் உயர்ந்த மனிதர்களாகக் காணப்படுகின்றார்கள் இதனை,

''அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்'' என்று சுப்பிரமணியபாரதியார் அன்பின் புனிதத்தன்மையை எடுத்தியம்பியுள்ளார்.

ஏனைய உயிர் இனங்களை விட மானிடரை ஆறறிவு படைத்த உயர் பிறவியாக இறைவன் படைத்துள்ளான். எனவே ஆறாவது அறிவைக் கொண்டு இன்பமயமான இயற்கைக் காட்சிகளுடன் அன்பு என்ற உயரிய நற்குணத்தால் ஒன்றிணைந்து நறுமணங் கமழும் பூந்தோட்டமாக வாழ்க்கையை அமைத்து இன்பமுடன் வாழவேண்டும்.

அன்பு என்றசிறந்த ஆயுதந்தான் நாம் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளிற்கும் தீர்வான ஒரு வழி.

அன்பினால் தான் பல காவியங்கள், ராச்சியங்கள், மகான்கள் எல்லாம் உருவாகியதாக வரலாறும், உலகம் போற்றும் பொய்யாமொழியும் கூறுகின்றது. ஆகவே அன்பைப் போற்றி அகிலத்தில் சிறந்து வாழ முயல்வோம்.

வரணியூர்
சி. நந்தா

# கோஷ்டி மோதலில் பஸ்வண்டி சேதம்

(கொழும்பு)

புசல்லாவை கொடகம பகுதியில் இருகோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட மோதலின் போது அக்கிராமத்தினூடாக பயணம் செய்த பஸ் வண்டியொன்று பலத்த தேசத்திற்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தையடுத்து புசல்லாவை பொலிஸ் அதிகாரிகள் அவ்விடத்திற்கு விரைந்து சென்றனர்.

இம்மோதலை பொலிஸ் தலையிட்டு சமசரசப்போக்கில்தீர்த்து வைத்தது.

இதனையடுத்து இப்பகுதியூடான பஸ்சேவைகள் தடங்கலின்றி நடைபெறுவதாக அறியப்படுகிறது. (த)

# படுகாயமடைந்தோரை, பார்வையிட பத்துப் பேர் அழைத்துச்செல்லப்பட்டனர்

(கொழும்பு)

கடந்த 25 ஆம் திகதி. பண்டாரவளை பிந்துனுவெவ இளைஞர் புனர்வாழ்வு நிலையத்தில் நடந்த அசம்பாவிதங்களின் போது படுகாயமடைந்தவர்களைப் பார்வையிடுவதற்கென அவர்களது உறவினர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கக் குழு மூலமாக வவுனியாவில்இருந்து அழைத்துச் செல்லப்பட்ட இவர்களில் பத்துப் பேர் அடங்குவர்.

தியத்தலாவை இராணுவ வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மூன்று பேரைப் பார்க்கவென அவர்களது ஆறு உறவினர்களும், கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் இருவரைப் பார்ப்பதற்கென அவர்களது நான்கு உறவினர்களுமே அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (உ)

# ம.ம.முன்னணி தலைவரை விடுவிக்க தீவிர முயற்சி

(கொழும்பு)

பண்டாரவளை படுகொலைச் சம்பவத்தைக்கண்டித்து மலையகத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் பதற்ற நிலையை தொடர்ந்து கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரனைவிடுவிப்பதுசம்பந்தமாக தமிழ் அரசியல் தலைவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் கூடிஆராய்ந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான (பி.பி.தேவராஜ் எம்.எஸ் செல்லச்சாமி) அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த விநாயகமூர்த்தி, உட்பட பிரமுகர்ள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (க-வ)

# சுயதொழில் முயற்சி

(புலோலி)

மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மாரியம்மன் மாதர் சங்க உறுப்பினர்களின் சுய தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கென சர்வதேச கெயர் நிறுவனம் 28 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்நிதி, சங்க அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறையில் வழங்கப்படவுள்ளது. (உ-52)

# காடுகளுக்கு விஷமிகள் தீ வைப்பு

(கொழும்பு)

தியத்தலாவை பகுதி காடுகள்,விஷமிகள் சிலரால் திட்டமிட்டு தீவைத்துக் கொளுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால்,மலையடிவாரங்களில் அரசினால் பாதுகாத்து வளர்க்கப்பட்ட பாரிய விருட்சங்களும் அபூர்வமான வன விலங்குகளும் அழிவடைந்து வருவதாக வன இலாகா அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

# மனத்தூறல் அறிமுகவிழா

(புலோலி)

ஆசிரிய ஆலோசகர் ந. பார்த்தீபனின் ''மனத்தூறல்'' சிறுகதைத்தொகுதி நூல் அறிமுக விழா கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. (உ-52)

# போதைப்பொருள் சடத்தியோர் கைது

(கொழும்பு)

கதிர்காமத்திற்கு போதைப்பொருள் கடத்திச் செல்ல முற்பட்ட இருவரை அம்பாந்தோட்டை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து கதிர்காமம் நோக்கி சென்றுகொண்டிருந்த மினிபஸ்ஸில், போதைப் பொருளை உடலில் மறைத்துச் செல்ல முற்பட்ட போதே பொலிஸார் இவர்களை கைது செய்தனர். (உ)

# ஒய்வூதியம் வழங்கல்

(கொழும்பு)

சட்டவரைபுகள் ஆக்கப்பட்டதும் பத்திரிகையாளருக்கு ஒய்வூதியம் வழங்கப்படும்என தொடர்பு சாதனத்துறை அமைச்சின் செயலர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்குவது தொடர்பாக அரசின் அங்கீகாரம் கிடைத்திருப்பதாகவும், அது தொடர்பான சட்டவரைபுகள் ஆக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# இலவச கண்ணாடி வழங்கல்

(புலோலி)

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையும், வடமராட்சி லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்திய கண் வைத்திய சிகிச்சை முகாமின்போது, கண்ணாடி பெறத் தகுதியானவர்களென இனம்காணப்பட்டவர்களுக்கு, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபை கண்ணாடிகளை வழங்கியுள்ளது. (உ-52)

# நுவரெலியா-கதிர்காமம் விரைவில் விமானசேவை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து நுவரெலியா மற்றும் கதிர்காமம் போன்ற பகுதிகளுக்கு விமான சேவை மேற்கொள்வதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விமான சேவை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் இலங்கையின் வேறுபல வணக்கஸ் தலங்கள் மற்றும் வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களுக்கும் விமான சேவையை விஸ்தரிக்கும் முயற்சிகள் அரச உயர் மட்டத்தில்மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அறியப்படுகிறது.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை கவரும் முகமாகவே மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (க-த)

# போலி ஆயிரம் ரூபா நோட்டு வங்கியில் வைப்பு

(கொழும்பு)

ஹட்டன் மக்கள் வங்கிக் கிளையில் ஆயிரம் ரூபாபோலி நோட்டுகள வைப்பிலிடப்பட்டுள்ளதாக வங்கி முகாமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாலையில் வங்கி முடியும் தறுவாயில் காசாளர்கள் பணத்தைக் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அச்சமயமே மேற்படி4 ஆயிரம் ரூபா போலி நோட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டதாக வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த)

# டெங்கு காய்ச்சலில் இருபத்திமூன்று பேர் பலி

(கொழும்பு)

டெங்குக் காய்ச்சலால் இவ்வருடம் 23 பேர் இதுவரை பலியாகியுள்ளதாக சுகாதார அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இவர்களுள் 14 பேர் கொழும்பைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை சொறி,சிரங்கு போன்ற தொற்று நோய்களிற்கு கடந்த இருமாதங்களில் 100 பேர் வரை பீடிக்கப்பட்டுள்ளனர் எனவும் அறிவித்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி சுகாதார அமைச்சர் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலிலேயே மேற்படி தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன- (த)

# குடும்பப்பெண் மண்வெட்டியால் வெட்டிக் கொலை இரத்தோட்டையில் சம்பவம்

(கொழும்பு)

மாத்தளை மாவட்டத்தில் பெண்ணொருவர் அயல் வீட்டைச் சேர்ந்த ஒருவரால் மண்வெட்டியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரத்தோட்டைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இவர் டி. ஜி. சந்திராவதி (வயது 42) எனும் பெண்மணியே கொலை செய்யப்பட்டவராவர்.

இவருடைய கணவனான எம்.எம்.என் ஜயவிக்கிரம இரத்கோட்டைப் பொலிஸில் செய்த புகாரை அடுத்து பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

இப்பகுதியில் 3 வருடங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்ட பெண்ணொருவருக்கும் சந்தேக நபர்களுக்கும் இடையே ஏற்பட்ட பகைமையுணர்ச்சியே இக்கொலைக்கான காரணமெனப் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ரயிலிற்கு பயந்து ஆற்றில் பாய்ந்த இளம் பெண்

(கொழும்பு)

ரயில் பாலம் ஒன்றில் நடந்து கொண்டிருந்த இளம் பெண் ஒருவர் திடீரென ரயில்வரவே தனது உயிரை காப்பாற்றும் பொருட்டு ஆற்றில் பய்ந்த சம்பவம் தென் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நீச்சல் தெரியாத பிரஸ்தாப பெண் அலைகளுக்கிடையில் தத்தளித்ததாகவும் அப்பகுதிக்கு விரைந்த மீனவர்கள் அப்பெண்ணை கரைசேர்த்ததாகவும் மேலும் அறியப்படுகிறது (க-உ)

# பண்டாரவன்னியனை கெளரவிக்க வேண்டும்

(வவுனியா)

வன்னிராச்சியத்தின் இறுதி மன்னன் பண்டார வன்னியனுக்கு,அரசாங்கம் நினைவு முத்திரை வெளியிட்டு கெளரவிக்க வேண்டும்.

வவுனியா கோவில் புதுக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் சேர.நடேசபிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பண்டார வன்னியனின் 197வதுநினைவு தினத்தை முன்னிட்டு, வவுனியா மாவட்டச் செயலக வளவில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு மாலை அணிவித்து இவ்வைபவத்திற்கு தலைமை தாங்கினார் (செ)

## சவுதியிலுள்ள அமெரிக்க நிறுவனங்கள் மூடப்படும்

### அமைச்சர் எச்சரிக்கை

(றியாட்)

அமெரிக்கா இஸ்ரேலைத் தொடர்ந்து ஆதரித்தால் சவுதி அரேபியாவிலுள்ள அமெரிக்க வர்த்தக நிறுவனங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும்.

இவ்வாறு சவுதி அரேபிய பாதுகாப்பு அமைச்சர் அமெரிக்காவை கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளார்.

மத்திய கிழக்கில் இடம்பெறும் வன்முறைகளை பலஸ்தீனியர்களே தூண்டி வருகிறார்கள் என அமெரிக்க பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இதனால் ஆத்திரமுற்ற சவுதி அரேபியா, அமெரிக்காவை மேற்கண்டவாறு எச்சரித்துள்ளது.

அத்துடன் பலஸ்தீனியருக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதலுக்கு ஆதரவாக அமெரிக்கா தொடர்ந்தும்செயற்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் சவுதி மேலும் தெரிவித்துள்ளது. (செ)

## சிங்கப்பூர் விமானம், தாய்வானில் விபத்துக்குள்ளானது

## அறுபத்தாறு பேர் ஸ்தலத்தில் பலி

(சிங்கப்பூர்)

தாய்வானில் இருந்து, நேற்று முன்தினம் 179 பேருடன் லொஸ்ஏஞ்ஜல்ஸ் புறப்பட்ட சிங்கப்பூர் விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 66 பேர் பலியாகினர்.

தாய்பே விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட 10 விநாடிகளில் வானில் வெடித்துச் சிதறி, தீப்பந்தம் போல் நிலத்தில் விழுந்ததாக, இவ் விமான விபத்தை நேரில் கண்டோர் தெரிவித்தனர்.

20 விமானச் சிப்பந்திகள் மற்றும் 189 பயணிகளுடன் புறப்பட்ட மேற்படி விமானம் விபத்துக்குள்ளாகியதில், பலியான 66 பேரை விட, 75 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

3 விமான சிப்பந்திகள் உட்பட 18 பேர் காயங்கள் எதுவும் இன்றி தப்பியிருப்பதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, காயமடைந்தவர்களில் பலர் ஆபத்தான கட்டத்தில் இருப்பதால் இறந்தோர் தொகை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

விமானத்தில் பயணம் செய்தவர்களில் சிங்கப்பூர், இந்தியா, அமெரிக்கா நாட்டவர்களே அனேகர் என கூறப்படுகிறது.

விமானம் விபத்துக்குள்ளான காரணம் பற்றி இதுவரை அறிவிக்கப்படவில்லை. (து-உ)

## 55 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு புற்றுநோய்

### ஜப்பானிய பேராசிரியா எச்சரிக்கை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் ஐம்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் கட்டாயமாக புற்றுநோய்க்கான இரத்த பரிசோதனை செய்ய வேண்டுமென்று ஜப்பானிய பேராசிரியர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மருத்துவ மகாநாடு ஒன்றில் சிறுநீரகம் பற்றிப் பேசுகையிலேயே சிங்கப்பூரில் உள்ள ஆண்களுக்கு ஐம்பத்தைந்து வருடங்களுக்குப் பின் சிறுநீரகத்தில் புற்று நோய் காணப்பட்டிருப்பதாகவும் அதனால் எல்லா ஆண்களும் குறிப்பிட்ட வயதில் புற்று நோய் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் முப்பது வீத மானவர்களுக்கு சிறுநீரகப் புற்று நோய் பீடித்துள்ளது என்றும் அந்தப் பேராசிரியர் மகாநாட்டில் குறிப்பிட்டார். (து-க)

## உலக தரிசனம்

## சுஹாட்டோவின்மகனுக்கு சிறைத் தண்டனைவிதிப்பு

### சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசிய முன்னாள் அதிபர் சுஹாட்டோவின் மகனுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதற்கு அந்நாட்டு சட்டத்தரணிகள் சங்கம் கடுமையாக எதிர்த்துள்ளது.

மேற்படி தீர்ப்பை எதிர்த்து முன்னாள் அதிபர் சுஹாட்டோவின் மகன் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுதாக்கல் செய்வது குறித்து ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேசியாவில் ஒரு சில மாதங்களுக்கு முன்இடம்பெற்ற பங்குச்சந்தை குண்டு வெடிப்புச்சம்பவம் மற்றும் ஊழல் மோசடிகள் குறித்து இவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க-து)

## வீசா பெறாமல் அமெரிக்காவிற்கு எவரும் பிரவேசிக்க முடியும்

### ஜனாதிபதி கிளின்டன் தெரிவிப்பு

(வொஷிங்டன்)

விசாபெறாமல் அமெரிக்காவிற்குள் எவரும் பிரவேசிக்க முடியுமென அந் நாட்டு அதிபர் பில்கிளின்டன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; மேற்படி நடை முறையானது 12 வருடங்களிற்கு அமுலில் இருக்கும் எனறும் வர்த்தக மற்றும் உல்லாசப் பயணத் துறைகளில் ஈடுபட்டோர் இதனால் நன்மைஅடைய முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையுட்பட பல்வேறு ஆசிய நாட்டவர்கள் இதனால் நன்மையடைய முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது, [க-த]

## பிரதமருடன் வலதுசாரி தலைவர் கடும் விவாதம்

### இஸ்- பாராளுமன்றத்தில் சம்பவம்

(ஜெருசலேம்)

கடந்த செப்ரெம்பர்மாதம் 28 ஆம் திகதி இஸ்ரேல், பலஸ்தீன நாடுகளிடையே மீண்டும் மோதல்களை ஆரம்பித்ததன்பின் முதல் தடவையாக இஸ்ரேல் பாராளுமன்றம் அண்மையில் கூடியது.

அவ்வேளை இஸ்ரேல் பிரதமர் எகுட்பராக்கிற்கும் அந்நாட்டு வலது சாரி இபக்கத் தலைவர் எரியல் சரோனிற்கும் இடையில் பெரும் விவாதங்கள் இடம் பெற்றது.

இஸ்ரேல் பிரதமர் பலஸ்தீனத்துடனான சமாதானம் சாத்தியப்படக்கூடியது.

ஆனால்சமரசம்செய்வதற்கு எவரும் இல்லை என்றதொனியில் வெளியிட்ட கருத்துக்கு எரியல்ஷரோன் கண்டனம் தெரிவித்த போதே விவாதங்கள் எழுந்தன.

பலஸ்தீன நாடு, இஸ்ரேலுடன் சமாதானத்தை ஏற்படுத்த தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொண்டு வருவது பலஸ்தீனத்தை பலவீன நாடாக மற்றைய நாடுகள் கருத வழிவகுக்கும் எனவும் இப்பாராளுமன்ற அமர்வின் போது வலதுசாரிகட்சித் தலைவர் எடுத்துரைத்ததாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை,

நேற்றைய தினம்இடம்பெற்ற மோதல்களில் இரு யூதர்கள் கொல்லப்பட்டதாகவும் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தொடரும் மோதல்களில் இருதரப்பிலும் 150 இற்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது; [உ]

## குளோனிங் முறையில் பன்றிக் குட்டிகள்

### இலண்டனில் சம்பவம்

(இலண்டன்)

இங்கிலாந்தில் கடந்த ஏப்ரல் மாதம் முதன் முறையாக குளோனிங் முறையில் பன்றிக் குட்டிகள் பிறந்துள்ளன.

இந்த உயிர்உருவாக்கமுறை பன்றிகளின் உடல் பாகங்களை மனிதனுக்குப் பொருத்தும் தொழில் நுட்பத்திற்கு ஒரு பெரிய திருப்பமாகவும், அத்திவாரமாகவும் அமைந்துள்ளது.

அமெரிக்க, ஐரோப்பியநாடுகளில் மட்டும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் ஈரல், சிறுநீரகம், இதயங்கள் என்பவற்றைபன்றியிடமிருந்து பெறுவதற்கு காத்துள்ளனர். (த)

## உறுப்பினர் பயணம்

சீன கம்யூனிஸ் கட்சியின் மத்திய கமிட்டியின் உறுப்பினரும் அரசியல் குழு நிரந்தர உறுப்பினருமாகிய ரெய்ஜெய் சிலஜெர்மனி பின்லாந்து மொங்கோலியா ஆகியநாடுகளுக்கு அரச முறைப் பயணமாகச்சென்று வந்துள்ளார்.

அந்த நாடுகளிற்கு இவர் சுற்றுப்பயணம் செய்த வேளை அந்நாட்டு அதிகாரிகளுடன்சினேகிதபூர்வபேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

இந்தப்பேச்சுவார்த்தைகளின் ஊடே.பொருளாதாரம், கல்வி தொலைத் தொடர்பு துறைகளில் கூட்டு ஒத்துழைப்புகள் பற்றியும் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.(து

## அமெரிக்கத் தூதரகம் இந்தோவில் மூடப்பட்டது

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் இருக்கும் அமெரிக்கத் தூதரகம் மூடப்பட்டுள்ளது என பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்புக் கருதியே தூதரகம் மூடப்பட்டதாக அறிவிக்கும் அமெரிக்க பேச்சாளர் றிச்சேட் பூட்சர் மேலும் தெரிவிக்கையில்; ஜகார்த்தா அரச அதிகாரிகளிடையே ஏற்பட்ட வரய்ச் சண்டையை அடுத்து அமெரிக்கா இந்த முடிவுக்கு வந்தது என்றார்.

இந்தோனேசியா அமைச்சர்கள் அடிக்கடி அமெரிக்காவை அவதூறாகப் பேசி வருவதாகவும் வஷிங்டனுக்கு இது ஒவ்வாத செயலாகப்பட்டதாகவும் அதனாலேயே தூதரகம் தனது நடவடிக்கைகளை நிறுத்தி விட்டதாக தூதுவர்றோபேட் அறிவித்துள்ளதாகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இருந்தாலும் ஓரிரு தினங்களில் தூதரகம் மீண்டும் மக்களுக்கு சேவையாற்றும் என்றும் தெரிவித்துள்ளார். (து)

## ரகுமானின் புதியதாவல்

(சென்னை)

இசைப்புயல் எம். ஆர் ரகுமான் ஆங்கில நாடகமொன்றிற்கு இசையமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

கீழைத்தேயமேலைத் தேய இசையில் பரிச்சயமான இவர் முழு ஆங்கில நாடகத்துக்கு இசையமைக்கும் பொறுப்பை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (து)

## 28பேர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேசிய மத்திய யாவாவில் பெய்துவரும் கடும் மழையினால் ஏற்பட்ட மண்சரிவில் 28பேர் உயிரிழந்துள்ளனர்.

இப்பகுதியிலுள்ள பல வீடுகள் சேதமாகியதுடன் 5மீற்றர் உயரம் வரை சேறு மூடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

## பலஸ்தீன ஆதரவாளர்மீது இஸ்ரேல் விமானத் தாக்கு

(ஜெருசலேம்)

பலஸ்தீன தலைவர் ஜஸிர் அரபாத்தின் ஆதரவாளர்களின் அலுவலகங்கள் மீது இஸ்ரேலிய உலங்கு வானூர்தி கடும் தாக்குதல் நடத்தி உள்ளன.

இஸ்ரேலிய மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இவ் உலங்குவானூர்தித்தாக்குதல் காரணமாக ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை

கெரில்லா யுத்தம்ஒன்றை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதற்கான எச்சரிக்கையாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக இஸ்ரேலின் பாதுகாபபு அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ)

## இரு மாநிலங்களும் வீரப்பனுடன் பேசியதில் தவறில்லை

### நீதிபதிகள் தெரிவிப்பு

(பெங்களூர்)

இரு மாநில அரசுகளும் வீரப்பனுடன் பேச்சுவார்த்தைநடத்தியமை சட்ட விரோதமான தென்று நாம் சொல்லவில்லை ஆனால் தனி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த விதம் தவறானது என்று கர்நாடக உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.

உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பினை நிறுத்தி வைத்து கருத்துத் தெரிவிக்கையில்; நீதிபதிகள் எஸ்.பி. பாருச்சா, ரி.பி. முஹாபட்சா. வை.யூ. சந்வால் ஆகியோர் நடிகர் ராஜ்குமாரை விடுவிப்பதற்காக பதற்றமடைந்த நிலையில் மிகவும் அவசரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று கருத்துத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நீதிபதிகள மேலும் தெரிவிக்கையில்; தமிழக அரசும் கர்நாடக அரசும் சந்தன கடத்தல் வீரப்பனிடம் நடந்து கொண்ட முறைகளைப் பார்க்கையில் இன்னுமொரு மாநிலம் தோன்றி மூன்று மாநிலங்களாக செயற்படுவது போலிருக்கின்றன வென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை ராஜ்குமார் விடயம் சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்டதால் மாநில அரசுகளிடமிருந்து முறைப்படி மத்திய அரசுக்கு வேண்டுகோள் வராத பட்சத்தில் அரசு தலையிடமுடியாதென்றுகூடுதல்சொலிஸ்ட்டர் ஜெனரல் தெரிவித்தார். (து)

உள்ளிய எய்தல் எளிதுமன் மற்றும் தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

– குறள்

# வலம்புரி

## ஜனாதிபதியின் உரை உண்மையாகுமா?

பண்டாரவளைப் படுகொலைச் சம்பவம், அதனையடுத்து இடம்பெற்ற மலையக வன்முறைகள், தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாட்டுமக்களுக்காற்றிய உரை ஆகிய முத்தரப்பு நிகழ்வுகள் நாட்டு மக்களுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் ஓர் ஆழமான உண்மையை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் காலாகாலமாக பேரினவாதத்தின் கரங்கள் சிறுபான்மையினரான தமிழ் மக்களின் உயிரை, உடமையை, உரிமையை, அழித்தொழித்துள்ளதென்பதே அவ்வுண்மையாகும்.

1983-ம்ஆண்டு ஜூலையில் ஓடிய இரத்த ஆறு போன்று மீண்டுமோர் நிகழ்வு இம்மண்ணில் ஏற்படுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் என ஜனாதிபதி உறுதிபடக் கூறியுள்ளமை பாராட்டுக்குரியது. ஜனாதிபதியென்ற பொறுப்பு வாய்ந்த பதவியிலிருந்து கூறப்படவேண்டிய ஒன்றைஅவர் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

ஆனால் அதனை செயலுருப்படுத்த வேண்டுமாயின் இலங்கையில் இருக்கக்கூடியதான இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பது அவசியமாகும். இத்தீர்வு முயற்சி மூன்றாந் தரப்புடனேயே சாத்தியமாகுமென்பதில் இரண்டாம் கருத்திற்கு இடமில்லை. ஜனாதிபதியின் உரையை நடைமுறைப்படுத்துவதற்கு அவர் சார்ந்தவர்களும் பௌத்த மகாசங்கமும் எத்துணை தூரம் இயைந்து போவார்கள் என்பது கேள்விக்குறி. ஏனெனில் இனப்பிரச்சனைவிடயத்தில் நோர்வேயின் விசேட தூதுவர் சமாதான முயற்சியில் இறங்கியபோதிலும் அதன்முடிவுகள் தூரம் தொடுவானமாகவேயுள்ளது.

ஜனாதிபதி ஆற்றிய உரை சந்தர்ப்பவசத்தாலன்றி உண்மையின்உணர்வால் கூறப்பட்டதாயின் மீண்டும் நோர்வேயின் சமாதானத் தூதிற்குமவர் உரமூட்டுவதும் உற்சாகம் கொடுப்பதும் கட்டாயமானதாகும். அதே நேரம் இனப்பிரச்சனைக்கான தீர்வைஅடைவதற்கு முன்னதாக சிறைகளிலும் பொருளாதாரத் தடைகளிலும் நசியுண்டுள்ள தமிழ்மக்களின்அடிப்படை உரிமைகள் மீட்கப்பட வேண்டும். அதன் பின்பே இனப்பிரச்சனைக்கான தீர்வென்பது புத்துயிர் பெறமுடியும்.

# சூரபன்மனின் மார்பை பிளந்த வீரவேல்
# நம் பாவ வினைகள் அனைத்தையும் நீக்கும்



தேவார முதலிகள் மூவரும் சிவபெருமானைத் துதிக்கின்ற போது, ''பெற்று முகந்தது கந்தனையே பிரமபுரத்தை உகந்தனையே, ''நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்'' சமர சூரபன்மாவைத் தடிந்த குமரன் தாதை என்று ஆயிரம் ஆயிரம் நாமங்களால் முருகப் பெருமானைத் தந்த முழுமுதற் பரம் பொருள் என ஏத்துவார்கள்.

நக்கீரர் முருகப் பிரானை, ''அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ் இணர் மாமுதல் தடிந்தமனுவில் கொற்றத்து, எய்யா நல் இசைச் செவ்வேள் தோய்'' எனத் துதிப்பார்.

'பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச் சூர்முதல் தடிந்த சுடர்இலை, நெடுவேல்' எனச் செவ்வேள் பெருமான் திருக்கைவேலை வாழ்த்துவார்.

குழந்தைவடிவேலன்தேவர்களின் ஓலத்தைச் செவிமடுத்தார். சூரனுடைய ஆற்றலைக் கண்ணாற் கண்டார். '. இவனுடைய மார்பைப் பிளந்து, வருவாய்' எனக் கூறித் திருநெடு வேலைச் சூரன் மீது செல்லவிடுத்தார். சக்திவேல்ஒளியோடு சூரனை நாடி ஏகியது. கோபமாகச் சென்றது.

முன்நோக்கி வருகின்ற வேலினைச் சூரன் கண்டான். அழிவில்லாத வரத்தினேனை இந்த வேல் என்ன செய்யும் அம்மா என்று சிரிப்போடு கோபங் கொண்டான். அனைத்து உயிர்களோடு அகிலத்தையும் அழித்த பினபு இந்த வேலினையும் அழிப்பேன் என்று எண்ணிச் சூரன் கடலின் நடுவனாகநின்றான்.

### கடலில் நின்றான்

நெருப்புப் போன்ற இலைகளும் புகை போலக் கொம்பர்களும் பொன் போன்ற பூக்களும் மரகதம் போன்ற காய்களும் செந்நிற மணிகள் போன்ற பழங்களுமாகச் சூரபன்மன் பெரிய மாஉருச் சமைந்து கடலில் நின்றான். அசைவில்லாத சூரன் அசையத் தொடங்கினான்.

உடம்பிடித் தெய்வம் இவ்வாறு உருகெழு செலவின் ஏகி மடம் பிடித்திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்ததன்றே என்பது கச்சியப்பர் கனிந்த மொழி.

வேல் மாமரத்தைப் பிளக்க வெட்டுண்டு சூரன் வீழ்ந்தாலும் அழிந்திலன். அது முன்னைநாள்தவம், பெருமை பொருந்திய வலிமை உடையது தவமே அல்லாமல் வேறு ஒன்று உண்டோ,

### இடுக்கண்

தவஆற்றலினாலேமாவுருச் சாய்தலும் சூரபன்மன் பழையதன் வடிவத்தினோடும் கோபங் கொண்டு வாளை உருவிப்போர் புரியவந்தான். வேல்நாயகம் சீறும் சூரனின் மார்பைக் கிழித்தது. அங்கத்தை இரண்டு கூறாக்கி அலை கடலில் வீழ்த்தியது.

வேதங்கள் ஆர்க்க விண் பழி மீண்டது தேவர்கள் பொழியும் பூமாரியில் மூழ்கியது.கோபவடிவம் நீங்கியது அருள் உரு அமைந்தது. கங்கையில் நீராடியது.தேவர்கள் இடுக்கண் களைந்த எங்கள் முருகப்பெருமான் செங்கையில் செவ்வேள் வீற்றிருந்தது வீரவேல் அது – வெற்றிவேல் வாழ்க.

சிவபிரானுடைய வரத்தால் சூரபன்மன் மீண்டும் எழுந்தான். சேவலும் மயிலு

### உயிர் பிரிந்தான்

தேவர்கள் முருகப் பெருமானைப் போற்றினார்கள ''பெருமானுடைய திருவடிக்கே மீளா அடிமைகளாகத் தொழும்பு பூண்டோம். சூரபன்மன் மடிந்த செய்தி செவியில் சேரப் பதுமகோமளை உயிர் பிரிந்தாள். அது தலையாய அன்பு என்பர் கச்சியப்பசிவாசாரியர்

கடலில் மீன் வடிவாகி இவற்றைப் பார்த்திருந்த இரணியன் பாரில் வந்தான். தந்தையின் நிலைக்கு இரங்கினான் நான் இதுவே நிகழும் என்றுமுன்னே சொன்னேன். மாற்றாரோடு போர் புரிந்து தோற்றாய். அற்றால் மயிலாகச் சுமக்கும்கதியோ'' என்று

## சிவ சண்முகவடிவேல்

மாகிச் சினங் கொண்டு முருகப் பெருமானிடத்தில் போர்த் தொழில் கருதி வந்தான்.

மருள் கொண்ட பறவையாக வந்த சூரன் மீது எம்பிரான் | அருள் கொண்ட பார்வை நல்கினர். தெருள் கொண்டு சூரன் நின்றான்.

சேவலைக் கொடியாகக் கொண்டார். மயிலைவாகனமாக்கிக் கொண்டார். செவ்வேள் பெருமான் முன்னைய சேவலையும் மயிலையும் இந்திரனும் அக்கினி தேவனும் ஆக அருள் புரிந்தார்.

தந்தையின் நிலைக்கு ஏங்கினான். அக்கணமே கடமைகளைச் சரிவரக் கவனித்தான் துயருக்கு வித்து என்று ஆக்கத்தை வெறுத்தான் சிவபிரானை மனத்தில் எண்ணித் தவத்தைக் கதியடையப் புரிந்தான்

முருகப்பெருமான் வீரவாகு தேவர் மூலம் தேவர் சிறை மீட்டார். அனைவரையும் அழைத்துக் கொண்டு முருகப் பெருமான் செந்தி மாலைகளுக்குச் சென்றார். மூவிரண்டு முகமுள்ள ஏகநாயகன் உலகருள் கருணையோடு இனிதிருந்தார்.

# முதியோரை பேணுவதன் மூலமே பிள்ளைகள் சான்றோராக முடியும்

### சமூக சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

முதியோரை சுதந்திரமாகச் செயற்பட அனுமதிப்பதன் மூலம், அவர்களுடைய பிள்ளைகள் கௌரவம் மிக்கவர்களாக மிளிர முடியும்.

காத்தான்குடி பிரதேசத்தில் அண்மையில்நடைபெற்ற சிறுவர் முதியோர் தின விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு - கிழக்குமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று சொந்தப் பெற்றோரைப் பிள்ளைகள் தனி அறையில் சிறை வைக்கிறார்கள் இது அவர்களுக்குச் செய்யும் துரோகம். சிறுபிள்ளைகளாயினும் நாம் அவர்களை அடிமைப் படுத்த நினைக்கக் கூடாது. சிறுவர்களை அடிப்பதோ அல்லது ஏசுவதோ கல்வியறிவற்ற சமூகத்தின் செயல் எனவும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில், முதியோர், இளையோர், அநாதைப் பெண்கள் அங்கவீனர்கள் ஆகியோர்க்கு அன்பளிப்புகளும் வழங்கப்பட்டது. (உ-60

# இந்து விஞ்ஞானத்திற்கு ஊக்கம் அளிக்கவும்

[மட்டக்களப்பு]

விஞ்ஞானம் என்றதும் நமக்கு மேலைத்தேய நாடுகளேஞாபகத்துக்குவருகிறது. ஆனால் ஜப்பான், சீனா, போன்ற கீழத்தேய நாடுகளிலும் விஞ்ஞானம்இருக்கிறது.

இந்தியாவில் இந்து விஞ்ஞானம் இருக்கிறது. மந்திரம், மருத்துவம், ஜோதிடம் இவையே இந்தியாவின் முக்கிய விஞ்ஞானங்களாகும்.

இவ்வாறு மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற மட்டக்களப்பின் மந்திர வழக்குகள் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிழக்குப்பல்கலைக் கழக விரிவுரையாளர்மௌன குருசாமி தெரிவித்தார்

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்.

கிழக்குபல்கலைக்கழகத்தில் இந்து காலாசார பாடத்தில் ஒரு பகுதியாக இந்து விஞ்ஞானம் சேர்க்கப்பட வேண்டும்.

நமது முன்னோர்களின் அரும் பொக்கிஷமான இந்து விஞ்ஞானம் இன்று அருகிவிட்டது. இளைஞர் மட்டத்தில் இதனைப் புகுத்தி புத்துயிர் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

[உ-60]

## சாயி அருளமுதம்



இதயக்கமலத்தில் இறைவன் நிலை நிறுத்தப்பட்டால் நீங்கள் இறைவனை எங்கும் காண முடியும். சடப்பொருள் உலகிலும் காணமுடியும். 'ஸர்வம் பிரம்ம மயம்' என்பது ஒரு பேருண்மையாகும். நற்செயல்களிலும், நற்சிந்தனைகளிலும், நல்லோருடன் கூடுவதிலும் மட்டுமே ஈடுபடப்போவதாக இன்றே முடிவு செய்யுங்கள்.

உயர்வளிக்க வல்ல எண்ணங்களிலே உங்கள் சிந்தையை உறையவிடுங்கள். நீங்கள் சம்பாஷிக்கும் நேரத்தில் ஒரு கணப்பொழுதையேனும் வீண்வம்பு பேசுவதிலும், வீம்பு அளப்பதிலும் கீழான பொழுதுபோக்கு விளையாட்டுக்களிலும் வீணாக்காதீர்கள்.

நன்றி

**நாளாந்த நற்சிந்தனை**

## இன்று உதைப்பந்தாட்டம்

(அரியாலை)

வலிகாமம் கல்வி வலய உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் இன்று பி.ப1-30 மணிக்கு யாழ் ஸ்கந்தவரோதயா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

16வயதுப் பிரிவணியில் யூனியன் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும். 18வயதுப் பிரிவில் யூனியன் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் மோதவுள்ளன. (த 106)

## படை தரப்பில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

மூதூர்ப் பிரதேசத்தில் கிளிவெட்டிப்பகுதியிலுள்ள இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் கடந்த 30ஆம் திகதி மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதனையடுத்து அப்பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது மூவர் கைதாகி விசாரணைக்காக 58ஆவது படைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (த)

# கிராம சேவகர் மனைவியின் தாலிக்கொடி பேஸ்

(ஈச்சமோட்டை)

வட்டுக்கோட்டைப் பகுதியில் அண்மையில் இரவு வேளை கிராம சேவையாளர் வீட்டினுள் நுழைந்த திருடர்களினால் அவரது மனைவியின் 9 பவுண் தாலிக்கொடியும் 7 ஆயிரம் ரூபா பணமும் அபகரிக்கப்பட்டுள்ளது;

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; இரவு நித்திரையில் இருந்த சமயம் ஜன்னல் ஊடாகஉள்நுழைந்த திருடர்கள் கிராம சேவையாளரின் மனைவியின் கழுத்திலிருந்த மேற்படி தாலிக் கொடியை குறட்டினால் வெட்டி எடுத்துள்ளனர்.

அத்துடன் அலுமாரியிலிருந்த பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இவ்வீட்டினர் கைதடியில் இருந்து இடம் பெயர்ந்து இப்பகுதியில்தங்கியுள்ளனர்.

மேற்படி சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. (த 59)

யாழ்ப்பாண ... நாவாந்துறைப் படிப்பகம்
நாவாந்துறைப் படிப்பகம்

# 50 ஆயிரம் ரூபா உடன் வழங்க அமைச்சர் டக்ளஸ் உத்தரவு

(கொழும்பு)

பண்டாரவளை விந்துனுவெவ புனர்வாழ்வு தடுப்பு முகாமில் கொடூரமானமுறையில் படுகொலை செய்யப்பட்ட வட பகுதியைச்சேர்ந்த இளைஞர்களின் குடும்பத்திற்கு உடனடியாக50ஆயிரம் ரூபாவை முற்பணமாக வழங்குமாறு வடபகுதி அபிவிருததி புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு கிழக்கு தமிழ் விவகார, இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்த புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைத்தலைவருக்கு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த மாதம் 25ம் திகதி இடம் பெற்ற தமிழ் இளைஞர்களின் படுகொலைச் சம்பவத்தில் வடபகுதியைச் சேர்ந்த ஆறு இளைஞர்களின் சடலங்களை அடையாளம் காட்டியிருந்தமை தெரிந்ததே.

அடையாளங்காணப்பட்ட ஆறு சடலங்களில் மூன்று சடலங்கள் யாழ்ப்பாணத்திற்கும் மூன்று சடலங்கள் வவுனியாவிற்கும் எடுத்து வரப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கவை.

இதே வேளை மேலும் சில சடலங்களை அடையாளம் காணும்பொருட்டு வவுனியாவில் இருந்து உறவினாகள் அழைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி

யாழபபாணம் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலையைக் கண்டித்தும், பண்டாரவளை படுகொலைகளைக் கண்டித்தும் கிளிநொச்சியில் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஸ்கந்தபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி அரச அதிபர் செயலகத்தில் முடிவடைந்தது.

வெகுஜன அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த இந்த ஊர்வலத்தின் போது மகஜர் ஒன்றும் அரசஅதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ஒட்டி கடையடைப்பும் செய்யப்பட்டிருந்தது. (வ)

### சந்திரசேகரனின் மனைவி கோரிக்கை

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி. சந்திரசேகரனை விடுதலை செய்யுமாறு அவாது மனைவி ஜனாதிபதியிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

மலையகத்தில் இடம் பெற்ற வன்செயலைத் தொடர்ந்து கைதான சந்திரரசேகரன் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ந)

## கரவெட்டி இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

(புலோலி)

பண்டாரவளையில் படுகொலை செய்யப்பட்ட கரவெட்டியை சேர்ந்த சிற்றம்பலம் முகுந்தன் (வயது 21) என்பவரது சடலம் நேற்றைய தினம் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைத்ததுடன் மரணச் செலவிற்காக பத்தாயிரம் ரூபாவையும் கையளித்தார். (ந-52)

### பத்திரிகையாளர்...

அடிகளார் மற்றும் கத்தோலிக்க மதகுருமார் அருட்சகோதரிகள் யாழ் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமகாராஜா, யாழ். மாநகர சபை உறுப்பினர் முகுந்தன் மற்றும் பொது அமைப்புகளின பிரதிநிதிகள், வடபிராந்திய இந்துப்பேரவை மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

மௌனப்போராட்டத்தை தொடர்ந்து வடபிராந்திய பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி உரையாற்றி போராட்டத்தை முடித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு அனுப்பும் பொருட்டு மகஜர் ஒன்றும் யாழ் அரச அதிபரிடம் கையளிககப்பட்டது.

இதேவேளை வடஇலங்கை பத்திரிகையாளர சங்கம் கேட்டுக்கொண்டதற்கமைய பாடசாலைகள், அரச திணைக்களங்களில் காலை 10-30 முதல் 10-32 வரை மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

(வ-12,43,59,106)

### யாழ். பஸ் ..

பட்டிருந்தனர்.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது (வ)

### சகோதரர்கள்......

சகோதரியான 6 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் மீரா முகைதீன் ரம்ஸிஸா (வயது 12) ஆகிய சகோதரர்களே பலியானவர்களாவர்.

நேற்றுக்காலை பாடசாலைக்குச் சென்ற இவர்கள் இருவரும், பாடசாலையை விட்டு வந்ததும் ஆற்றுக்குச் சென்று குளித்த போது ஆற்று நீரில் மூழ்கி மரணம் அடைந்தனர்.

இது தொடர்பாக காத்தான் குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (வ)

## வவுனியாவில் மோதல்

(கொழும்பு)

வவுனியா இரணையிலுப்பைக் குளப் பகுதியில் நேற்று அதிகாலை படையினருக்கும், புலிகளுக்குமிடையே இடம் பெற்ற மோதல் சம்பவமொன்றில படைத்தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாகவும், மற்றுமொருவர் காயமடைந்ததாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை படையினர் பதில் தாக்குதல் நடத்தியதில் புலிகள் தரப்பிலும் ஒருவர் உயிரிழந்ததாக விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)

### 'ட்ரக்'

எழுதுமட்டுவாழ் பகுதிளில் முன்னரங்க நிலைகளைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டிருந்த படையினர் மீது புலிகள மேற்கொண்ட சரமாரியான மோட்டார்த் தாக்குதலில் நான்கு படையினர் காயமடைந்ததுடன் நாகர் கோவில் பகுதியில் இருசாராருக்கும் இடையே இடம் பெற்ற நேரடிமோதலில் புலிகள் தரப்பில் 2 பேர் உயிரிழந்துள்ளதாகவும் விஷேட ஊடகத்தகவல் நிலையம் மேலும் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)

ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
கமல், ஜோதிகா, ஜெயராம், தேவயானி நடித்த
தெனாலி
CDபிரதி புதியவெளியீடு
10-30,2.30 (ப. நேரம்)
(கி-688)

### புலிகளின்

தலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் கலந்து கொண்டார்.

இப் பேச்சுவார்த்தைகளின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் சமாதான முயற்சி, அரசியல் தீர்வு, அரசியல் சீர் திருத்தம் போன்றவை சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் ஒரு நடவடிக்கையென்றும் விடுதலைப் போராட்டத்தின் உண்மையான நிலையையும், தமிழ் மக்கள் மீது அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இன அழிப்பு யுத்தத்தினையும் நோர்வே பிரதிநிதியிடம் பிரபாகரன் விரிவாக எடுத்துக் கூறினார்.

இந்நிலையில் அனைத்துலக சமூகத்திற்கும், எமது போரட்டத்தின் நியாயத்தையும், உண்மைத்தன்மையையும், எடுத்துச்சொல்வதோடு இலங்கை அரசின் இனஅழிப்பு மற்றும் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி அனைத்துலக சமூகத்துக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துமெனத் தான் நம்புவதாகவும் பிரபாகரன் நோர்வேயின் பிரதிநிதியிடம் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனைச் சந்தித்துப் பேசி தூதுக்குழுவினர் வன்னித்தள நிலமைகளை நேரில் சென்று பார்த்ததுடன், வெகுஜன அமைப்பு பிரதிநிதிகளையும் சந்தித்து அங்குள்ள நிலமைகளை அறிந்து கொண்டனர். அத்துடன் இடம்பெயர்ந்த மக்களின் துன்பதுயரங்களையும் நேரில் கண்டறிந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இந்திய அரசுடன் இலங்கை இனப்பிரச்சினை சம்மந்தமாக பேச்சுவார்த்தைநடாதித்ய பின் முதன் முறையாக இலங்கையின் இனப்பிரச்சினை சம்மந்தமாக அக்கறை செலுத்தும் நோர்வேயுடன் பேசியிருப்பது இது வேமுதற் தடவையாகும் என்பதுஇங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்றைய சந்திப்பின் போது இரு தரப்பினரும் நடாத்திய பேச்சுவார்த்தை சம்மந்தமான முடிவுகள் தெரிவிக்கப்படவில்லையாயினும் தமது வன்னி விஜயம் திருப்தியளித்துள்ளதாக நோர்வேயின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளதாக புலிகளின் வானொலி நேற்றிரவு அறிவித்துள்ளது. [வ]

## களஞ்சியம் பூட்டியதால் லொறிகள் திரும்பின

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கு நவம்பர்மாதம்(85ஏபி)புள்ளிக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணப் பொருட்களை புனர்வாழ்வுக் களஞ்சியத்தில் இருந்து எடுக்கமுடியாததால் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகள் வெறுமனே திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரணப் பொருட்களை புனர்வாழ்வுக் களஞ்சியத்தில் பெறுவதற்கான வழங்கற் கட்டளைகளை அவ்வப்பகுதி பிரதேசசெயலர்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியபோதும் கொக்குவில் நொதேன் ரயர் தொழிற்சாலையில் உள்ள பிரதான உனவுக் களஞ்சியம் பூட்டப்பட்டிருந்தமையினால் சங்கங்கள்நிவாரணப் பொருட்களைப் பெற முடியாது திரும்பியதாக கூட்டுறவுச் சங்கவட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் நவம்பர் மாதத்திற்கான நிவாரணப்பொருட்களை மக்கள் பெறுவதில் காலதாமதத்தை எதிர் நோக்கவேண்டியுள்ளது.(வ)

## 13 சடலங்களும் புலிகளிடம் கையளிப்பு

மட்டுவில் தெற்குப்பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற மோதலின்போது உயிரிழந்த 13 பேரின் சடலங்களை நேற்று குருநகர் இறங்கு துறையில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை அதிகாரிகளினூடாக விடுதலைப் புலிகனின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை இப் 13 சடலங்களையும் அரசசெலவில் அடக்கம் செய்யவுள்ளதாக யாழ். பாதுகாப்பு தலைமையகம் விடுத்த செய்தி தவறானது எனவும் பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-12)

### மலையக வன்முறையை அடுத்து
## சகல பொலிஸாரினதும் விடுமுறைகள் ரத்து

(கொழும்பு)

மலையகத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் பதற்ற நிலையைத் தொடர்ந்து, சகல பொலிஸாரினதும் விடுமுறைகள் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய அவர் வன்முறைகளையும், அசம்பாவிதங்களையும் ஏற்படுத்தியோர் மீது தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை மலையகத்தில் தற்போது நிலவி வரும் பதற்ற நிலையானது நாட்டின் சகல பகுதிகளிலும் பரவிவிடாமல் தடுப்பதற்காகவே, கடமையிலீடுபட்டிருக்கும் அனைத்துப் பொலிஸாரினதும் விடுமுறைகள் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

## மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

கிறீம் ஹவுஸ் உரிமையாளரான இளம் குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரம் தாக்கியதில் மரணமான சம்பவம் நவாலிப்பகுதியில் நேற்றுக்காலைஇடம் பெற்றது இச்சம்பவத்தில் நவாலியைச் சேர்ந்த பொடிமாத்தையா சந்திரபாலன் (வயது- 29) எ்பவரே மரணமானவராவார்.

8.00 மணியளவில் குளிர் சாதனப் பொட்டியின் மின் இணைப்பை துண்டிக்க முற்பட்ட வேளையில் மின்சார தாக்குதலிற்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் அவர்மரணமானார். (க-12)

### புலிகள்

ஒட்டிசுட்டான்.
★ லெப்டினன் இளங்கோ
[இராமசாமி நகுலேஸ்வரன்]
வன்னேரிக்குளம்
★ திருநீலன்
[திருநாவுக்கரசு உதயகுமார்]
யாழ்ப்பாணம்.

ஆகிய போராளிகளும், அதே தினத்தன்று முல்லைக் கடற்பரப்பிலேற்பட்ட தவறுதலான வெடிவிபத்தின் போது

★ கப்டன் சந்திரமதி
[குமாரசாமி செல்வி]
மட்டக்களப்பு.

ஆகிய போராளியும் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ)

### தரைவழி

சங்கத்தின் கண்காணிப்பு மற்றும் வழித்துணையுடன் திறக்க உதவுமாறு கோரி குடாநாட்டு மக்களின் கையொப்பத்துடன் ஜனாதிபதி சந்ரிகாகுமாதுங்கா, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலமைக்காரியாலய உயர் அதிகாரி, தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு மகஜர் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஹிஸ்புல்லா பதவி ஏற்பு

(கொழும்பு)

முன்னாள்தபால் தொலைத்தொடர்புசாதனப் பிரதி அமைச்சரும் தேசிய ஐக்கிய முன்னணியின் உப தலைவருமான எம்.எல்.எச்.எம் ஹிஸ்புல்லா தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவராக நேற்றுக் காலை பதவி ஏற்றுள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் சிபார்சின் பேரில் இவர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ந-5)

### பனிப்புலம்

இத்திரையரங்கில் கடந்த சில மாதங்களாக சமூகத்தைச் சீரளிக்கும் ஆபாசப்படங்கள் காண்பிக்கப்பட்டதாகவும் இக்காட்சிகள் ஊரடங்கு வேளையிலும் இடம் பெற்றதாகவும், தெரிவிக்கப்பட்டதையடுத்தே, திரையரங்கை மூட உத்தரவு பிறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சமூகசீரழிவை ஏற்படுத்தும் ஆபாசப்படங்களை திரையிடும் திரையரங்குகள் விரைவில் இனம்காணப்பட்டு உரியவர்கள் மீது சட்ட நவடிக்கை எடுக்கப்படடுமென்றும் திரிலோகநாதன் மேலும் தெரிவித்துள்ளார். (ந-2)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அஸோஸியேட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.